**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**EP No. 112/2018 in O.S. 31/2006**

PW1 – முகமது இப்ராஹிம் த/பெ முகமது கவுஷ்
நாள்–03.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

அசல் வழக்கு எண் 31/2006–ல் நான் முத்தவள்ளியாக இல்லை என்றால் சரியல்ல. நான் பொது அதிகாரம் பெற்ற முகவராக இருந்தேன். சாட்சி மீண்டும் நான் அசல் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நான் முத்தவள்ளியாக இல்லை என்று கூறுகிறார்.இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்த காலத்திலும் நான் முத்தவள்ளி இல்லை என்றாலும் சரிதான். எனது தகப்பனார் எந்த தேதியில் எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் தேதி நினைவில்லை 4–வது மாதம் 2003–ஆம் வருடம் ஆகும். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் ஜனவரி மாதம் 2021–ல் இறந்தார் தேதி நினைவில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள எதிர்மனுதாரர்கள் பெயர்கள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் ஏற்கனவே வழக்கு சொத்து சம்மந்தமாக தீர்ப்பாணை பெற்றுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.